புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# ஔவையாரின் நீதிநூல்கள் காட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

முனைவர் ஜெ.ஜெயசித்ரா MA.,M.Phil.,B.Ed.,Ph.D.,NET
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தூயநெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்

ஆய்வுச்சுருக்கம்

நற்றமிழ் இலக்கியங்களின் நல்லதோர் இலக்கு கற்றோர் இன்புற்று மற்றோரை இன்புறச் செய்வது.அந்த வகையில் பண்டைய காலந்தொட்டே தமிழ் இலக்கியங்களில் ஏராளமான நீதிநூல்கள் தோன்றியுள்ளன.அவற்றுள் மக்கள் மனங்களைப் பண்படுத்தி பழந்தமிழருடைய பாரம்பரிய பண்பாட்டைச் சீர்க்குலையாமல் காத்திடவும், அழியாமல் அறிவுறுத்திடவும் தோன்றியவையே ஔவையாரின் நீதிநூல்கள்.அதாவது,ஓடும் நீர் மண்ணில் ஊறி ஊற்றுத்தெளிவாய் வெளிப்படுவது போல வாழும் வர்க்கையில் வெளிப்பட்டு நம் வாழ்க்கையை உயர்த்த உதவுவது ஒழுக்கம் அந்த ஒழுக்கத்தை உணர்த்தும் இலக்கியங்களான ஆத்திச்சூடி,கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்றன ஔவையாரால் எழுதப்பட்டுள்ளன.அவற்றை பிற்காலத்தில் நாம் நீதி நூல்கள் என்று அழைக்கின்றோம்.வடமொழியில் நீதம் எனும் சொல்லிற்கு வெண்ணெய் என்று பொருள்.அதாவது பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது போல வாழ்க்கை எனும் பாடத்திலிருந்து திரட்டப்படுவது நல்வழி எனும் ஒழுக்கமாகும்.இவ்வாறு மனிதகுல வாழ்க்கையில் மிக நெருக்கமாக பின்னி பிணைந்திருக்கம் மனித குண நலன்களை பக்குவப்படுத்தும் பண்பாட்டுக்கூறுகளை ஔவையாரின் நீதிநூல்களில் எங்ஙனம் வெளிப்படுகிறது என்பதை ஆராய்ந்துரைத்தலும்,ஆய்ந்த சிலவற்றை சமகால செயல்பாடுகளோடு ஒப்பிட்டு பார்த்தலும் என்பதன் அடிப்படையில் இக்குறுங்கட்டுரை இடங்பெறுகின்றது.

## முன்னுரை

செந்நெறிகள் பல காட்டும் செம்மாந்த தமிழ்க்கிழவியாம் ஔவையார் பலநூறாண்டுகளுக்கு முன்னமே பாடிய பாடல்களே ஆத்திச்சூடி,கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்பவை.இவை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் அசைபோட்டு அகம்மகிழத்தக்க வகையில் ஆழ்ந்த அகன்ற கருத்துக்களைக் கொண்டிருப்பவை. இந்த நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகள் ஒவ்வொன்றும் தனிமனித வாழ்க்கைக்கும், சமுதாயத்திற்கும் ஏற்ப இன்றைய காலத்திற்கு மட்டுமல்லாது என்றென்றைக்கும் அவர்கள் வாழ்க்கையை செம்மாந்து வாழ வழிவகைச் செய்யும் தனிமனிதனுக்கான ஒழுக்கம், குணநலன், சொற்படிகேட்டல், கல்வி, நட்பு, உதவி, நன்றி, ஈகை, வாய்மை, அறம், அன்பு, தகுதி, இயல்பு,செயல்பாடு,விருந்தோம்பல்,மானம்,இரக்கம் போன்ற இன்னும் ஏராளமான மனிதகுல வாழ்வினைப் பண்படுத்தும், உயர்வாக்கும் சமுதாயப் பண்பாட்டுப் பதிவுகளைக் கொண்டிலங்கும் நூல்தான் ஔவையாரின் நீதிநூல்கள் என்று ஆராய்வதை முதன்மை நோக்காகவும், ஆராய்ந்துரைக்கும் அப்பண்பாட்டுக்கூறுகளை ஒவ்வொரு தனிமனிதனும் கடைப்பிடித்து சமூகப்பண்பாட்டினை அழியாமல் பேணி பாதுகாக்க வேண்டும் என்பதை துணைமை நோக்காகவும் கொண்டு இக்குறுங்கட்டுரை எழுதப்படுகின்றது.

பண்பாடு -பொருள் – விளக்கம்

பண்பாடு எனும் சொல்லை முதன்முதலில் இரசிகமணி டி.கே.சி. அவர்கள்தான் 1937-ல் வழங்கியதாக பேராசிரியர் எஸ் .வையாபுரிபிள்ளை குறிப்பிடுகின்றார் என்று முனைவர் க.ப.அறவாணன் தம் நூலில் கூறுகிறார்.பண்பாடு என்ற சொல் தமிழில் அண்மைக்காலமாக வழங்கி வரும் வினைச்சொல்.இச்சொல்லை ஆங்கிலப் பேரரகராதி To become refine or to reform என பொருள் தருகின்றது.எனவே பண்பாடு என்பது மனித சமுதாயத்தின் வளர்ந்த நிலையைக் காட்டுவதாகும்.அதாவது மக்களின் ஒழுக்க நலம்,அறிவு நலம்,கருத்துநலம்,குண நலம்,கொள்கை நலம்.வாழ்க்கை நலம் என நல்ல செயல்கள் அனைத்தும் வளர்ந்து வரும் பண்பாட்டைக் குறிப்பதாகும். பண்பாடு எனும் சொல்லிற்கு – அமைதல்,சமைதல்,உதவுதல்,ஏவல் செய்தல்,சீர்திருத்தல்,சொற்படி கேட்டல்1 போன்ற பல பொருளைத் தருகின்றது.பண்பாடு என்பது ஒருமனிதனின் நற்கருத்து மற்றும் நற்சிந்தனைகள் அடங்கிய குணங்களை மேன்மேலும் உயர்வடையச் செய்கின்ற செயல்பாட்டிற்கான ஒழுக்கமே பண்பாடு என்பது பெருள்.

பண்பாடு-அறிஞர்கள் கருத்து

பண்பாடு என்பதற்கு நாம் நினைப்பது போல் உடலாலும் உடையாலும் வளரும் ஒன்றல்ல.அது நம் மனதோடு ஒன்றி ஆன்ம நேயமாய் வெளிப்படுவது என்று சாமர்செட்மாம் கூறுகின்றார்.அதேபோல் பண்பாடு என்பது மனிதனின் கைவண்ணத்தை வெளிப்படத்துவது என்கிறார் மாலினோவ்ஸ்கி.மேலும் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள மனிதன் உருவாக்கிக் கொண்ட ஒரு கருவிதான் பண்பாடு என்கிறார் சி.சி. நாத்.ஒருவர் தன் குண நலன்களை நிரப்புவதிலும்,தன்னை சூழ்ந்து நிற்கும் சமுதாயத்தின் நலன்களை நிரப்புவதிலும் பேரவா கொண்டிருக்கும் செம்மைத் தன்மையே பண்புடைமை’என்கிறார் மேனாட்டறிஞர் மேத்யூஆர்னால்டு2.மேலும்,தமிழிலக்கிய அறிஞர்களும், பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்3, பண்புடையார் பட்டுண்டு உலகம்4, மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்5 என்று குறிப்பிடுகின்றார்கள்.

எது பண்பாடு?

பண்பாடு என்பது சீர்மையைக் காட்டும் மன இயல்பாகும்.அதாவது பிறருக்காக தன்னை அளித்தலும்,அழித்தலுமே பண்பாட்டின் வடிவங்களாகும்.பாடப்படும் பாட்டிலும் வரையப்படும் ஓவியத்திலும்,செதுக்கப்படும் சிற்பத்திலும் இவற்றை அனுபவிக்கும் தன்மையிலும் கூட பண்பாட்டுக் கூறுகள் அடங்கியுள்ளன எனலாம்.எனவே சமூகத்தின் அங்கமாக விளங்கும் மனிதன் தான் கற்றவற்றை தன் இனத்தவர்க்கும்,சந்ததியினர்க்கும் கற்பிப்பதையே பண்பாடு எனக் கொள்ளலாம்.நிறைவாக பண்பாடு என்பதனை ஒருவகையான தப்பிக்கும் பதம் (evasive term)காரணம் இதுதான் பண்பாடு என அறிதியிட்டு உறுதியாக கூற முடியாத நிலையில் ஒரு மனிதன் மட்டும் மனித கூட்டத்தின் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையிலான வாழ்வில் வெளிப்படும் அனைத்து நற்செயல்பாடுகளையும் நாம் பண்பாடு எனக் கொள்ளலாம்.

பண்பாடு – வகைகள்

பண்பாட்டினை 3 வகைகளாகப் பாகுபடுத்துவர்.அவையாவன, 1.அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலில் வெளிப்படும் பண்பாடு2.கல்வி,கேள்வி வழியாக பேணுகின்ற பண்பாடு3.குறியீடுகளைப் பயன்படுத்துவதால் வெளிப்படும் பண்பாடுஎன பண்பாடுகளிலும் வகைகள் உண்டு.பண்பாட்டினுள்ளும் சில கற்றுணர்வது,கேட்டுணர்வது,சில தானாக அமைவது.இவ்வாறு மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையிலெல்லாம் ஔவையாரின் நீதி நூல்களில் இடம்பெற்றுள்ளதா என்பதை இணி காணலாம்.

ஔவையார் – அறிமுகம்

வெல்லற்கு அரிய மாந்தரெல்லாம் வியந்து போற்றும் ஒரு கிழவி
கூழுக்காக கவிபாடும் கூன்கிழவி அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும் மறவோம் மறவோம் மறவோம்

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வரிகளுக்கு இணங்க நம்முடைய வாழ்நாளில் ஒருநாளும் மறக்கக்கூடா அளவிற்கு ஔவையாரின் படைப்புகள் யாவும் காலத்தை வெல்ல

*கூடியதாக இருக்கின்றது.சங்ககால தமிழர்களின் வரலாறு ,வாழ்வியல் முறைகள் ,அறச்செயல்கள்,தத்துவம் ,வீரம் போன்ற படைப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியவரே ஔவையார்.ஔவையார் எனும் பெயரில் சங்க காலம் ,இடைக்காலம், பிற்காலம், சோழர்காலம் என பல்வேறு காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.மேலும் மூவேந்தர்கள் தமிழ்நாட்டில் பெருமையுடனும், புகழுடனும் வாழ்ந்த காலத்தில் பல மன்னர்களுக்கு பல பாடல்களைப் பாடி பெண்கவிச் சிங்கமாக உலா வந்தவர்தான் ஔவையார்.ஔவையார் தமிழ் இலக்கிய உலகிலும் தமிழர் மனங்களிலும் நீங்காமல் நிலைக்கொண்டிருப்பவள் என்றால் அது மிகையல்ல உண்மையே.எ.கா: அ – அம்மா , ஔ – ஔவையார் என்று அரிச்சுவடியில் இடம்பெற்றுள்ள எழுத்துக்களலிருந்தே அறிமுகமாகி விடுகிறாள் ஔவை.மேலும் கற்றவர் கல்லாதவர் என்று எவரும் தம் தாயினை ஒருபோதும் மறவார் .அம்மா எப்படி ஒரு பிள்ளையை வீட்டில் பண்படுத்த பல அறிவுரைகளைக் கூறுவாளோ அது போல,வாழ்க்கை எனும் பயணத்தில் நம்மையெல்லாம் பண்படுத்த பல நல்வழிகளையும் நற்சிந்தனைகளையும் தம் நூலிலேக்காட்டி பண்பாட்டைப் பாதுகாக்க முனைந்தவளே நம்மூதாட்டி ஔவையார்.*

*நீதிநூல்களின் – சிறப்புகள்*

*ஔவையாரின் நீதி நூல்கள் நான்கு .அவை ஆத்திச்சூடி,கொன்றை வேந்தன்,மூதுரை,நல்வழி.இந்நான்கு நூல்களையும் உரையாசிரியர்களின் உதவியின்றி கற்றோர் மற்றோர் என அனைவரும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் படியாக அமைந்துள்ளது.அதாவது,ஆத்திச்சூடி-109வரிகள் ,கொன்றை வேந்தன்-91 வரிகள்,மூதுரை-30,நல்வழி-40 வெண்பாக்களையும் பெற்றுள்ளது.இதில் இடம் பெற்றுள் பாடல் வரிகள் சொல் வளம் ,பொருள் வளம், இசை வளம், உவமை நயம் மிக்குள்ளதால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் பெற்றதாய் உள்ளது.இந்நூல்கள் ஒவ்வொன்றும் சிறார் முதல் பெரியவர்கள் வரை அனைவர் மனங்களையும் பண்படுத்தவும்,பக்குவப்படுத்தவுமே படைக்கப்பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.*

*1.கல்வி*

*ஒற்றைவரிகளைக் கொண்ட ஆத்திச்சூடி மாணவர்களையும் மக்களையும் வாழ்வில் முறைப்படி வாழ்ந்து உயர்ந்த நிலையைக் கிட்டுவதற்கான ஒழுக்கங்களை கற்றுத்தரும் ஓர் ஒப்பற்ற நூலாகத் திகழ்கின்றது என்பதைப் பாடல்வரிகளுனூடே ஆராயலாம்.பண்பாடு என்பது இரண்டு வகையில் உருப்பெறுகின்றது .1.மரபு வழி ,2.கல்வி வழி.இதில் மரபுவழி என்பது தலைமுறை தலைமுறையாக வருவது.கல்வி வழி என்பது சமூக அரசியல் ,பொருளாதரச் சூழல் வழி வருவது.அந்த வகையில் கல்வி வழி பண்பாடென்பது ,ஒரு மனிதன் நல்ல பண்பட்ட மனிதனாக சமுதாயத்தில் மதிக்கத்தக்க மாண்புடையவனாக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள அறிவு எனும் கல்வி மிகமிக அவசியமான ஒன்றாகத் தேவைப்படுகின்றது.இதனை,*

*ஓதுவது ஒழியேல் 6*

*(END NOT LEARNING)*

*அதாவது ஒருவன் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் வாழ்வினைச் செம்மைப் படுத்திக்கொள்வதற்கும் துணைநிற்கும் செய்திகளை அறிவதற்கு நாம் அறிவு சார்ந்த நூல்களின் படிப்பதை தவறாமல் கடைப்பிடிக்க வழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறது.இன்றைய விஞ்ஞான உலகில் வலம் வந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் நம்மையும் அறிவு சார்ந்தவர்களாகக் காட்டிக்கொள்ள இந்த வரி மிகவும் பயனுடையதாக இருக்கும்.காரணம்,இன்றைய தலைமுறையினர் சிறியவர் முதல் பெரியவர் வரை தொலைபேசி,இணையம்,முகநூல்,புலனம் போன்றவற்றில் வெளியாகும் காட்சிகளைக் கண்டு களிப்பதால் புத்தகம் வாசிப்பைத்தேடி நகர்ந்து செல்ல வேண்டியிருக்கின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.மேலும்,*

*கைப்பொருள் தண்ணில் மெய்ப் பொருள் கல்வி7*

*LEARNED WEALTH IS SUPERIOR TO THE EARNED WEALTH*

*அதாவது,கல்வியே உண்மையான செல்வம் என்கிறது கொன்றை வேந்தன்.ஆனால் மக்களோ நிலையான கல்வியைக் காட்டிலும் நிலையற்ற செல்வத்தை தேடுவதிலே அதிக கவனம் செலுத்துகின்றனர்.மக்கள் உண்மையான கல்விச் செல்வத்தை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம்*

கொடுத்து வீட்டையும் நாட்டையும் நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும்.அதற்கு கல்விஅவசியம் என்பதை உணர வேண்டும்.இதனால்தான்

ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்8

*LACK OF EDUCATION LEADS TO LACK OF GOOD THOUGHT OR ACTION*

கல்விதான் ஒருவர்க்கு நன்மை தீமை எவை என்பதை பகுத்துப் பார்க்க வழிகாட்டுகிறது.உயரிய கல்வியின் வழியாக மனித மனம் செம்மைப்படுகின்றது.இதன்விளைவுகளாக நல்லெண்ணங்களும் நற்சிந்தனைகளும் மனித நடவடிக்கைகளாகின்றன.எனவே மதிக்கத் தக்க ஒழுக்க மிக்க சரியான வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்வர்கள் பெரும்பான்மையாக கல்வியறிவு பெற்றவர்களே என்பதை இதன் வழி பெறமுடிகின்றது.

*2.*ஒழுக்கம்

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்கிறது வள்ளுவம்.ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒழுக்கம் மிக மிக அவசியாகும்.தனிமனிதன் ஒழுக்கமுடையவனாக இருந்தால்தான் சமுதாயம் பண்பாடு உடைய சமூகமாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.இதனை,

நூல்முறைத் தெரிந்து சீலத்து ஒழுகு9

*FOLLOW CONDUCT CODE THAT ARE IN BOOKS TOLD*

அதாவது அற நூல்களைக் கற்றறிந்து அது காட்டும் ஒழுக்க நெறிகளின் படி வாழ்ந்தால் வாழ்க்கை பண்பாடுடைய வாழ்க்கையாகச் சிறக்கும் என்கிறது கொன்றை வேந்தன்.மேலும்,

இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்

ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று10

*MERITS COME BY CONDUCT*

தனிமனித ஒழுக்கமே ஒருவரின் உயர்வுத் தாழ்வைத் தீர்மானிக்கின்றது.ஆகவேஏ நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்துக் கொள்வதே வாழ்வில் உயர்வதற்கான நல்லவழி என்கிறது நல்வழி.

*3.*குணம் :

ஒருவரது குண நலன்களே அவருடைய வாழ்க்கையில் சிறப்புகளைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்பதனை,

குணமது கைவிடேல்11

*FORSAKE NOT VIRTUES*

வாழ்விற்கு சிறப்புத் தரும் குண நலன்களை ,நற்பண்புகளைத் தாமும் கற்று தம் பிள்ளைகளையும் கற்க வலியுறுத்தலாம் .விஞ்ஞான வளர்ச்சியால் மனிதநேயமற்று சுருங்கிக்கிடக்கும் மக்கள் மத்தியில் குண நலன்களும் நற்பண்புகளும்மாய்ந்துக் கொண்டுவரும் இந்நிலையில் நாம் நல்ல குண நலன்கள் குறித்து கற்பிக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளோம்.

*4.*சொற்படிக் கேட்டல்

மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கணியும் முன்னே கசக்கும் பின்னே இனிக்கும் என்பார்கள்.அதற்கேற்ப நம்முடைய வாழ்விலும் தந்தைமார்களும் தம் பிள்ளைகளுக்குக் கூறும் அறிவுரைகள் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட வேத மந்திரங்கள் போன்றவையாகும். இதனைப் பின்பற்றினால் ஒவ்வொருவரது வாழ்க்கையும் நெறிதவறாத,சிக்கலற்ற,வாழ்க்கையினை வாழமுடியும் என்பதை,

தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை12 , என்றும்,

*NO CHANTING BEFORE GOD IS GREATERTHAAN THE FATHERS WORD*

மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்13

*ADVICE OF THE WICE ARE TO BE OBEYED NICE*

*5.*நட்பு

நீ யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் உன்னைக் கேட்கத் தேவையில்லை உன் நன்பனைக் கேட்டாலே போதும் எனும் அளவிற்கு நட்பு அடையாளப்படுத்தப் படுகின்றது. நாம் பெற்றோர்களிடம்,உடன் பிறந்தோரிடம் பேசாத பலவற்றையும் நாம் நட்பில் வெளிப்படுத்துகின்றோம்.எனவே ஒவ்வொருவரது வாழ்விலும் நட்பு அவசியமாகின்றது.அத்தகைய நட்பு ஆழமானதாக அர்த்தமானதாக அமைத்துக்கொள்ள

வேண்டும்.அதாவது,நாம் நல்ல பண்புடைய மனிதர்களோடு நட்பு வைத்துக் கொளவது நல்லது.அவ்வாறு நற்பண்புடையோர்களிடம் நட்பு வைக்கும் பொழுது நாமும் நற்பண்புடையவர்களாகி வாழ்க்கையில் சிறந்து விளங்கி உயர்ந்த நிலையினை அடைய முடியும் என்பதை,

நல்லாரைக் காணபதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே -நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே14

*IT IS GOOD TO SEE HE MEN WISE,IT ISGOODD TO OBEY THEIR HEALTHY ODVICE*
*IT IS GOOD TO ADMIRE THEIR VIRTUES OF LIE,IT IS GOOD TO BE WITH THEM SCNS ANY STRIFE*

6.உதவி

ஒரு மனிதனின் நற்பண்புகளுள் மிகவும் தலமையான பண்பு மற்றவர்களுக்கு உதவி செய்தல் என்பது.அப்பேறுபெற்ற உதவிகள் குறித்து பல்வேறு இலக்கியங்கள் விவரிக்கின்றன.அவற்றுள் ஔவையாரின் நீதிநூல்களான மூதுரை, நல்வழி போன்றன பின்வருமாறு எடுத்துரைக்கின்றன.

நல்லார் ஒருவர் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே15 என்றும்,

*THE HELP EXTENDED TO A MAN OF PERFECT ,WILL LOOK LIKE LETERS CUT IN ROCK EDICT*

பாங்கறியாப் புல்லறிவாளருக்கு செய்த உபகாரம்
கல்லின் மேலிட்ட கலம்16 , மற்றும்

*THE HELF EXTENDED TO A MAN OF MOCK ,IS WSTE AS A VESSEL PUT ON THE ROCK*

நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார்ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து17

*THOUGH THE NOBELS AREE IN A CUTE FUND SHORT,THEY WILL NOT SHY TO HELP THE NEEDY WWITH HEART*

அதாவது நற்குடியில் பிறந்த மக்கள் செல்வநிலையிலிருந்து வறுமையுற்ற போதிலும் இல்லை என வரும் ஏழைகளுக்கு இல்லை எனக்கூறாது இருக்கும் பொருளிலிருந்து இயன்றதை வழங்கும் உயர்பண்புகளை பெற்றவர்களாகவே வெளிப்படுவர்.

7.நன்றி

ஒவ்வொரு மனிதனுடைய நற்பண்புகளுக்கெல்லாம் அடிப்படையான நற்பண்பு ஒன்று உண்டென்றால் அது செய்நன்றி மறவாமை எனும் நற்பண்பேயாகும்.அத்தகைய நன்றி மறவாமைக் குறித்து ,ஒருவர்க்கு செய்த உதவிக்கு பிரதிபலன் எப்பொழுது வரும் என காத்திருக்க வேண்டியதில்லை அது என்றாவது ஒருநாள் வந்து சேரும் என்கிறது மூதுரை.இதனை,

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா18 என்ற பாடலடிகள் கூறுகின்றது.

*ANY HOW THE GRATITUDE WILL COME FROM ONE,FOR THE GOOD ACTS THAT ALREADY HAVE DONE*

நிறைவுரை

இவ்வாறு ஆத்திச்சூடி,கொன்றை வேந்தன்,மூதுரை,நல்வழி எனும் நீதி நூல்கள் காட்டும் பல்வேறு வகையான பண்பாட்டுப் பதிவுகளைப் பற்றி அறிந்து கொள்ளலும் அறிந்தவற்றை இன்சுவையோடு ஏற்று மற்றவர்களுக்கு எடுத்துரைத்தலும் உரைத்தலோடு நின்றுவிடாமல் தாமும் அதில் கருத்தூன்றி வாழ்ந்து வாழ்க்கையில் உயர்ந்து சிறத்தலும் வேண்டும் என்ற எளியவளின் எண்ணத்தோடு இக்குறுங்கட்டுரை இனிதே நிறைவு பெறுகின்றது.

1.கழகத் தமிழகராதி, பக்.641
2.இந்தியப் பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும்-ஓர் ஒப்பீட்டுப் பார்வை,முனை. அ.மரியசூசை,பக்.13
3.நெய்தற்கலித்.133

*4.குறள் -996*
*5.குறள் -997*
*6.ஆதச்திச்சூடி, வரி -11, பக் .14*
*7.கொன்றை. பா.22, பக் -91)*
*8.கொன்றை. பா.91, பக் -141*
*9.கொன்றை. பா.53, பக் -115*
*10.நல்வழி-.31, பக் .237*
*11. ஆத்திச்சூடி, பா.36, பக்- 30*
*12. கொன்றை. பா.37, பக் -103*
*13. கொன்றை. பா.75, பக் -130*
*14. மூதுரை, பா-8, பக் .154*
*15. மூதுரை, பா-2, பக் .147*
*16. மூதுரை, பா-15, பக் .163*
*17. நல்வழி, ப-.9, பக்.198*
*18.மூதுரை, பா-1, பக் .146*

*ஆய்விற்கு உதவிய நூல்கள்*
*1.ஔவையாரின் நீதி நூல்கள், தமிழ்-ஆங்கிலம், நெல்லூர் கண்ணன், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை 2021.*
*3.இந்தியப் பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் – ஓர் ஒப்பீட்டுப் பார்வை, முனைவர் அ.மரியசூசை , பக்.13, செப்.2011, போதிவனம், இராயப்பேட்டை.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********